# ஒன்றாக வளர்வது மிகவும் சிறந்தது

## 4.4 நன்றியையும் துதியையும் செலுத்துங்கள்




**வேத வசனம்:** **அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.**

*சங்கீதம் 100:4*

**அறிக்கை:** **நன்றிகாணிக்கையுடன் தேவனிடம் வந்து மகிழ்ச்சியோடே கர்த்தருக்குப் பாட்டைப் பாடுங்கள்**

**சத்தியம்:** பூமியெல்லாம் களிப்புடன் கர்த்தரை ஆராதித்துத் துதி சத்தத்துடன் அவருக்கு முன்பாக வரக்கடவது. நாம் அவரால் உருவாக்கப்பட்டும், அவருடைய சுதந்தரமுமாயிருக்கிறோம்.



### வேதப் பகுதி: மத்தேயு 2:1-12

**பாடம்**

**1. தேவனுடைய பிரசன்னத்திற்கு நன்றி காணிக்கையுடன் செல்:** தேவனுடைய குமாரன் பெத்லகேமில் பிறந்தபோது கிழக்கிலிருந்து வந்த ஒரு ஞானிகள் குழு அவருக்குப் பொன்னையும், வெள்ளியையும், தூப வர்க்கத்தையும் பரிசளித்தார்கள். ஞானிகள் தங்களிடத்தில் உள்ள சிறந்தவற்றைக்கொடுத்து அவரை ஆராதித்தார்கள். இச்செயல் வேத வார்த்தைகளை நிறைவு செய்தது. "அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தைச் ஸ்தோத்திரியுங்கள்". அதுபோலவே நாமும் இன்று தேவனுடைய சந்நிதியில் வரும்போது காணிக்கைகளையும் தசமபாகங்களையும் நமது நன்றிகளையும் துதிகளையும் படைக்கவேண்டும். (மத்தேயு 2:11., சங்கீதம் 100:4)

**2. தேவனை சத்தமாகவும் மகிழ்ச்சியாகவும் துதி:** இஸ்ரவேலின் தேவனும் நம்முடைய கர்த்தருமாகிய கிறிஸ்து உயிர்த்தெழுந்த இரட்சகர். அவர் தற்போது எருசலேமின் கல்லறையில் இல்லை. இதனால் நாம் மகிழ்ந்து ஆர்ப்பரித்துத் தேவனைத் துதிப்போம். அனைத்துக்கும் மேலாக அவரை உயர்த்தி அவரைப் போற்றுவோம். சங்கீதப் புத்தகத்தின் ஆசிரியர் தாவீது சொல்லுகிறார், "கர்த்தரை நான் என் வாயினால் மிகவும் துதித்து, அநேகர் நடுவிலே அவரைப் புகழுவேன்". (சங்கீதம் 109:30)

**3. களிப்புடன் தேவனைத் துதியுங்கள்:** தேவன் தம்முடைய மக்களின் ஆர்வமிக்கத் துதியை விரும்புகிறார். வேதம் சொல்லுகிறது, "ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள். பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்". "அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து, தம்புரினாலும் கின்னரத்தினாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணக்கடவர்கள்". நாம் நம்முடைய கரங்களைத் தட்டி கரங்களை உயர்த்தி தேவனைத் துதிப்போம். நன்றி காணிக்கைகளின் மூலமாகவும் மகிழ்சி ஆரவாரத்தின் மூலமாகவும் நாம் நம்முடைய சோம்பேறித்தனமான உடலையும் கீழே விழச்செய்யும் உணர்ச்சிகளையும், அழிக்கும் எண்ணங்களையும் வெல்ல முடியும்.

**4. எல்லாவற்றிலும் தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்:** நாம் எல்லாவற்றுக்காகவும், எல்லா கடினமான நேரத்திலும் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். அவருடைய அன்பு எப்போதும் மாறாதது. நாம் எப்போதும் நன்றியறிதலுள்ள மக்களாக இருப்போம். நமக்கு வெற்றியைத் தரும் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்திற்காக நன்றி சொல்லுவோம். 1. பிள்ளைகளாகும்படியான அதிகாரம், 2.ஜீவப் புத்தகத்தில் பெயரெழுதப்பட்டது, 3.நிறைவான வாழ்வு, 4.பாவங்களை வெல்லும் வல்லமை மற்றும் பிற. நன்றியுள்ள இருதயம் இயேசு கிறிஸ்துவின் சித்தத்தைப் புரிந்துகொள்ளும். காரணம் தேவன் புதிய காரியங்களைச் செய்கிறவர். (புலம்பல் 3:23, சங்கீதம் 34:1, ஏசாயா 43:19-20)

**முடிவுரை:** இறுதி நாட்களில் துயர சம்பவங்கள் நடைபெறும். "மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும்..." ஆகிலும் நாம் நன்றியுள்ள மனிதராய் எப்போதும் தேவனுடைய சந்நிதியில் துதிகளையும் நன்றி காணிக்கைகளையும் கொண்டு வருவோம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.